புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 16, 2023 • புரட்சி 23 • முழக்கம் 44 • விலை ரூ.3.00

## தமிழக அரசின் பெண்ணுரிமைத் திட்டங்கள் வெற்றிநடை

# உற்பத்தி துறையில் தமிழ்நாட்டுப் பெண்களின் மகத்தான சாதனை

*தமிழ்நாட்டில் உற்பத்தி துறையில் 43 சதவீத பெண்கள் வேலை செய்கிறார்கள். இந்தியா முழுவதிலும் பெண்களின் வேலை - உழைப்பு பங்களிப்பு 39.8 சதவீதம் மட்டுமே, தேசிய சராசரியை மிஞ்சி நிற்கிறது தமிழ்நாடு. இது குறித்து விரிவான கட்டுரையை 'இந்து' ஆங்கில நாளேடு நவம்பர் 11,2023இல் வெளியிட்டுள்ளது. கட்டுரைக்கு சான்றாக பல சர்வே ஆய்வுகளை கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது.*

*ஒன்றிய ஆட்சி 2019ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு அறிக்கையில் இந்தியாவில் தொழிற்சாலைகளில் 15.6 இலட்சம் பெண்கள் வேலை செய்கிறார்கள். இதில் தமிழ்நாட்டில் மட்டும் 6.74 இலட்சம் பெண்கள் அடங்குவார்கள் (43 சதவீதம்) என சுட்டிக்காட்டியுள்ளது.*

*ஜுலை 22 இல் இருந்து ஜுன் 2023 வரை உள்ள காலக்கட்டத்தில் எடுத்த கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளில் (15-59 வயதுக்குள்) நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வேலை செய்யும் பெண்கள் 43.9 சதவீதம். இதே காலகட்டத்தில் தேசிய சராசரி 39.8 சதவீதம். இது தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் நடத்திய அறிக்கை.*

*வழக்கமாக தோல் பதனிடுதல், ஜவுளி, ஆட்டோ மொபைல் துறையில் பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். இப்போது வளர்ந்துவரும் தொழில் துறைகளான மின்சார வாகனங்கள், சூரிய ஒளி பேனல் தயாரிப்பு, காலனி உற்பத்தி துறையிலும் தமிழ்நாட்டு பெண்கள் இறங்கிவிட்டனர். இதனால் உற்பத்தி துறையில் பெண்களின் பங்களிப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.*

*"இதற்கு முக்கிய காரணம் துணிவும், வீரமும் உள்ளவர்களாக தமிழ்நாட்டுப் பெண்கள் இருப்பதும், பெற்றோர்கள் தரும் ஆதரவும் தான்" என்று கேட்டர் பில்லர் இந்தியா லிமிடெட் தலைவர் லட்சுமி உமாபதி கூறுகிறார். வணிக வளாகங்களை அமைக்கும் கட்டுமான பொருள் உற்பத்தி நிறுவனத்தை இந்தியா முழுமைக்கும் பல்வேறு மாநிலங்களில் வெற்றிகரமாக நடத்திவருபவர் லட்சுமி உமாபதி. 1994இல் அவர் தொடங்கிய போது சந்தித்த தடைகள் இப்போது நீங்கிவிட்டன என்கிறார்.*



*டைட்டான், அசோக் லேலாண்ட், டாட்டா எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் டாட்டா குழும தொழிற்சாலைகள் உள்ளிட்ட நிறுவனங்களில் பெண்களின் பங்களிப்புகள் குறித்து அதன் தலைமை நிர்வாகிகள் தெரிவித்த கருத்துக்கள் அந்த கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.*

*தமிழ்நாட்டில் பெண்களுக்கான பாதுகாப்பான பயணம், நகர கிராமத்தின் சிறப்பான திட்டங்கள், பெண்களுக்கு வழங்கப்படும் சிறப்பான திட்டங்கள், பணியிடங்களில் குழந்தை பாரமரிப்பு ஏற்பாடுகள், பாதுகாப்பான தங்குமிடங்கள், மருத்துவ வசதிகள் தான் தமிழ்நாட்டில் பெண்கள் தொழில்துறை வேலை வாய்ப்புக்கு பெரிதும் துணை நிற்கின்றன என்று அப்தார் குழும நிறுவனர் சவுந்தர்யா இராஜேஷ் கூறுகிறார். பெண்கள் சமத்துவத்திற்கு தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ள பல்வேறு திட்டங்கள் - பெண்களை அதிகார சக்தியுள்ளவர்களாக மாற்றியுள்ளது. இலவசப் பேருந்து பயணம், பெண்கள் உதவித் திட்டங்கள் மற்றும் உயர்கல்வி பெண்களின் இந்த உழைப்பு சந்தையில் பெரிதும் பங்கேற்க உதவுகின்றன என்கிறார் திறன் மேம்பாட்டு கழக இயக்குநர் தீனதயாளன். மகப்பேறு விடுப்பு காலத்தை ஒன்பது மாதத்தில் இருந்து ஒரு வருடமாக உயர்த்தியது. கல்லூரி படிக்கும் மாணவியருக்கு மாதம் ஆயிரம் உதவித்தொகை போன்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்கள் பெண்களின் நிலையை உயர்த்துகிறது என்கிறார் தீனதயாளன்.*

***குறிப்பு : அண்மைக்காலமாக சில ஆய்வாளர்கள் தமிழ்நாட்டில் பெண்கள் கல்விநிலை உயர்ந்தாலும் உழைப்பு சந்தையில் பெண்கள் உயரவில்லை என்று எழுதிவரும் ஆய்வு கட்டுரைகளுக்கு மறுப்பாக இக்கட்டுரை அமைந்துள்ளது.***

# கழகத் தலைமைக்குழு கூடியது

திராவிடர் விடுதலைக் கழக தலைமைக்குழு கூட்டம் 08.11.2023 புதன்கிழமை சென்னையில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

இத்தலைமைக்குழு கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

முதலாவதாக எது சனாதனம்? எது திராவிடம்? எனும் தலைப்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கழகத்தின் சார்பில் நடைபெற்று வரும் தெருமுனைக் கூட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. பொதுமக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறும் வகையிலும், கழக ஆதரவாளர்கள் பெருமளவில் பங்கேற்கும் விதமாகவும் இத்தெருமுனைக் கூட்டங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சென்னை, திண்டுக்கல், திருப்பூர், சேலம், கோவை, தருமபுரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் தெருமுனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திவரும் கழகத் தோழர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்படாத மாவட்டங்களில் அம்மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்து பேசி விரைவில் அந்தந்த மாவட்டங்களில் தெருமுனைக் கூட்டங்களை நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தீண்டாமை கடைபிடிக்கப்படும் இடங்களை கண்டறிந்து அதனை பட்டியலாக தயாரித்து தலைமைக்கு அனுப்பும்படியாக சேலத்தில் நடைபெற்ற செயலவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட பட்டியல்கள் தலைமைக் குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வாறு கணக்கெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட தலைமை காவல் துறை அலுவலகங்களிலும், மற்றும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்து தீண்டாமை கடைபிடிக்கப்படும் இடங்களில் தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு புகார் மனு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கழகத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி தயாரிப்பு குறித்து விவாதித்து நாட்காட்டி உள்ளடக்கம் இறுதி செய்யப்பட்டது.

புரட்சிப் பெரியார் முழக்கத்தின் ஆண்டு சந்தா வரும் டிசம்பர் (2023) மாதம் முடிவடைகின்ற நிலையில் சந்தாவை புதுப்பித்து வரும் டிசம்பர் இறுதிக்குள் தலைமையிடம் விரைந்து ஒப்படைக்க கழக நிர்வாகிகளிடம் அறிவிப்பு செய்வது என முடிவெடுக்கப்பட்டது.

கழகத்தில் சார்பில் புதிய வெளியீடுகளைக் கொண்டு வரவும் புத்தக விற்பனையை அதிகப்படுத்தவும் உண்டான வாய்ப்புகள் குறித்து தலைமைக் குழுவில் ஆலோசிக்கப்பட்டது.

இத்தலைமைக் குழுவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராஜேந்திரன், தலைமைக் குழு உறுப்பினர்கள் ஈரோடு ரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, கோபி இளங்கோவன், தபசி குமரன், அன்பு தனசேகரன், சிவகாமி, இளையராஜா, உமாபதி, காவை ஈஸ்வரன், விஜயகுமார், விழுப்புரம் அய்யனார், சூலூர் பன்னீர்செல்வம் பரிமளராசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தலையங்கம்

# ஜாதி அமைப்பு தேவை என்கிறது ஆர்.எஸ்.எஸ்

தமிழ்நாடு ஆர்.எஸ்.எஸ் தலைவர் கே.குமாரசாமி சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி ஒன்றை அளித்திருக்கிறார். அவர் பேசியிருக்கிற கருத்துக்கள் ஆர்.எஸ்.எஸ்–ன் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்திவிட்டது. சாதி ஒழிப்பு பற்றி ஆர்.எஸ்.எஸ் நிலை என்ன என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு சாதியை ஒழிக்க வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ்–இன் கொள்கையோ, கோட்பாடோ அல்ல, ஆனால் சாதியின் பெயரால், தீண்டாமையின் பெயரால் பாகுபாடுகள் காட்டுவதைத் தான் ஆர்.எஸ்.எஸ் எதிர்க்கிறது. சாதியை ஒழிக்க வேண்டும் என்று பேசி வந்தவர்கள் தான் காணாமல் போய்விட்டார்கள் என்று பச்சையாக சாதி அமைப்பு தேவை என்பதை வெளிப்படுத்தி இருப்பதோடு, மனிதர்களுக்குள்ளே சாதியின் அடிப்படையில் உள்ள உயர்வு தாழ்வு என்பது இயற்கையானவை, அவை மாற்ற முடியாதது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது. சாதி இல்லாவிட்டால் இந்துமதம் என்பதே இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சாதிகளின் பட்டியலே இந்துமதம் என்று அம்பேத்கர் கூறினார். ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு தத்துவங்களை உருவாக்கிய கோல்வாக்கர் ‘‘சமுதாய வளர்ச்சிக்கு ஜாதி ஒரு தடையாக இருந்ததே இல்லை. சாதிக் கட்டமைப்பு உறுதியாக இருந்ததால் தான் இங்கே இஸ்லாம் வேரூன்ற முடியவில்லை’ என்று தனது நூலில் எழுத்துப்பூர்வமாக செய்துவருகிறார் (Bunch Of Thoughts) ஜாதி என்பதே ஏற்றத்தாழ்வு அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஜாதி இருக்கலாம், ஆனால் ஏற்றத்தாழ்வுகள் கூடாது என்பது ‘சூரியன் உதிக்கலாம், ஆனால் வெயில் அடிக்கக் கூடாது’ என்று கூறுவது போல் இருக்கிறது. ஆனால் ஆர்.எஸ்.எஸ் இந்த சுயரூபம் மூடிமறைக்கப்பட்டு அதற்கு தேசபக்தி முலாம் பூசிக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு கேள்விக்கு சமூகநீதி எனும் இட ஒதுக்கீடு கொள்கையை ஆர்.எஸ்.எஸ் ஆதரிப்பதாக கூறியிருக்கிறார்.

செய்தியாளர்கள் திராவிட இயக்கம் பேசுகிற சமூகநீதிக் கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டதற்கு நேரடியாக அவர் பதில் கூறாமல் சமூக நல்லிணக்கத்திற்காக நாங்கள் தனிப் பிரிவையே நீண்ட காலமாக நடத்தி வருகிறோம் என்று மழுப்பலாக ஒரு பதிலை கூறியிருக்கிறார்.

சமூகநீதி என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை; அதற்கும் சமூகநல்லிணக்கத்துக்கும் என்ன தொடர்பு.? ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் பெண்கள் உறுப்பினராக இப்போதும் தடை நீடிக்கிறது. இதுதான் சமூக நீதியா?

அனைத்து ஜாதியினரும் அரச்சகராக வேண்டும் என்ற கோரிக்கை பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்ட போது, அனைத்து ஜாதியினரும் ஆகம கோயில்கள் உள்ளிட்ட அர்ச்சகராவதை ஆர்.எஸ்.எஸ் வரவேற்கிறது. ஆனால் அவர்களுடைய ஆகம வேத அறிவு எப்படி இருக்கிறது என்பதை மதத் தலைவர்கள் அடங்கிய ஒரு குழு தான் பரிசீலிக்க வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். அரசு தருகிற பயிற்சியை ஏற்க முடியாது. பார்ப்பனர்கள், வேத பண்டிதர்கள் அடங்கிய ஒரு குழு தான் அதை தீர்மானிக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு அனைத்து ஜாதியினரும் அரச்சகராவதை தாம் ஆதரிப்பதாக இரட்டை முகத்தை காட்டியுள்ளனர். வேத பண்டிதர்கள் எப்படி அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமையை வழங்குவார்களா? நிச்சயம் இது வழங்கமாட்டார்கள் என்று தெரிந்தே பேசுகிறார் ஆர்.எஸ்.எஸ் தலைவர்.

ஜாதி மறுப்புத் திருமணங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன என்ற கேள்விக்கு, அதை நாங்கள் ஆதரிக்கிறோம், ஆனால் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு இடையே இருக்கிற காதல் உண்மையான காதலாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஜாதி மறுப்புத் திருமணத்தை ஆதரிக்க முடியும். அந்த காதலை சொத்துக்களுக்காகவோ அல்லது மத காரணங்களுக்காகவோ பயன்படுத்துவதாக இருக்கக் கூடாது என்று அதற்கும் ஒரு நிபந்தனையை போட்டு இல்லாத ஊருக்கு போகாத பாதையை காட்டுகிறார்.

வெளிப்படையாக சில கருத்துக்களை தமிழ்நாட்டில் பேசுவதற்கு ஆர்.எஸ்.எஸ் தயங்குகிறது. ஜாதி மறுப்புத் திருமணங்களை, சமூகநீதிக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்வதற்கு அவர்களுக்கு துணிவு இல்லை. ஆனால் அதை ஆதரிப்பதாக கூறிவிட்டு அதை முடக்குவதற்கான நிபந்தனைகளை விதிக்கிறார்கள். மக்களை குழப்பப் பார்க்கிறார்கள். ஆனால் சாதி என்பது நீடிக்க வேண்டும், அது இயற்கையானது என்பதில் மட்டும் உறுதியாக இருக்கிறார் இதுதான் ஆர்.எஸ்.எஸ்–இன் பார்ப்பனியம் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

# தீபாவளிக்கு வாழ்த்துக் கூறாதது ஏன்?

*தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஏன் தீபாவளிக்கு வாழ்த்து கூறவில்லை, இது சங்கிகள் எழுப்புகிற ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. தொலைக்காட்சி விவாதங்களிலும் தொடர்ச்சியாக இதையே கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு பல விளக்கங்களை நம்மால் கூறமுடியும்.*

*தீபாவளிப் பண்டிகை என்பது என்ன? அது தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த போராட்டத்தைப் பற்றி நடந்த ஒரு புராணக் கதை. தேவர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் வேதங்களை வைத்துக் கொண்டு மக்களை சுரண்டி பிழைத்த ஒரு கூட்டம். நாடோடியாக வந்த ஒரு கூட்டம், அவர்களை எதிர்த்துக் கேள்வி கேட்டவர்கள் உள்ளூர் மன்னர்களாக இருந்த அசுரர்கள். எனவே தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நீண்ட நெடிய போராட்டங்கள் நடந்திருக்கிறது என்பதைத் தான் புராணக் கதைகளாக எழுதி, அந்தப் புராணக் கதைகளில் தேவர்கள் உயர்வானவர்கள், அசுரர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்ற சிந்தனையை மக்கள் உள்ளத்தில் ஆழமாக விதைத்து விட்டார்கள். அந்த அடிப்படையில்தான் நரகாசுரன் என்பவன் அசுரன் அவன் அழிக்கப்பட வேண்டியவன், மகா விஷ்ணு பன்றி அவதாரம் எடுத்து வந்து நரகாசுரனை அழித்தார், அதை கொண்டாடும் நாள்தான் தீபாவளி என்று கூறுகிறார்கள். ஒரு சிறிய கேள்வியை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது. மனித மாண்புள்ள எவரும் சூழ்ச்சிகரமாக ஒருவர் கொல்லப்பட்டதை கொண்டாட்ட நாளாக நடத்தமுடியுமா? பொதுவாக இறந்து போனவர்களை பற்றி விமர்சிப்பதே பண்பாடு குறைவானது என்று கருதுகிற நாம், சூழ்ச்சிகரமாக கொல்லப்பட்டவருக்கு விழா எடுத்துக் கொண்டாட வேண்டும் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது?*

*தமிழக அரசு தீபாவளி கொண்டாடுகிற மக்களை மதிக்கவில்லை என்று சொல்வதிலும் நியாயம் இல்லை. தீபாவளி கொண்டாடுகிற மக்களுக்கு அரசு செய்ய வேண்டிய கடமைகளில் எந்த கடமைகளில் இந்த அரசு தவறியிருக்கிறது என்பதையும் அவர்கள் சொல்ல வேண்டும். மக்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதி செய்வதில் இருந்து, போனஸ் வழங்குவதில் இருந்து, அவர்கள் வெளியூர்களுக்கு செல்வதற்கு பேருந்துகளை சிறப்பாக ஏற்பாடு செய்தது என்று இன்னும் சொல்லப்போனால் தீபாவளிக்கு அடுத்தநாள் கூட அரசு விடுமுறை என்று அறிவித்திருக்கிறது தமிழக அரசு. எனவே நம்பிக்கை கொண்ட மக்களை புண்படுத்துவது தமிழக அரசின் நோக்கம் அல்ல. ஆனால் இதன் உள்ளடக்கத்தை பகுத்தறிவு பூர்வமாக திராவிட இயக்க கொள்கையின் அடிப்படையில் நாங்கள் பின்பற்றுகிறோம் என்று காட்டிக்கொள்வது என்பது ஒரு இலட்சியத்தின் அடையாளம் ஆகும்.*

*இங்கே தமிழ்நாட்டில் நரகாசுரன் அழிக்கப்பட்டதை கொண்டாட்டமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால், கேரளாவில் என்ன நடக்கிறது? மாபலி அசுரன் நல்லாட்சி நடத்தினான், நீங்கள் மீண்டும் வரவேண்டும் என்று சொல்லி இதே அசுரனை வரவேற்பதற்கு ஒரு விழாவாக ஓணம் பண்டிகை கொண்டாடுகிறார்கள். வீட்டு வாசலிலே கோலம் போட்டு புத்தாடை உடுத்தி அசுரனை வரவேற்கிறார்கள். இந்து மதம் என்பது இந்தியா முழுமைக்கும் பொதுவானது என்று சொல்வது எவ்வளவு முரண்பாடானது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. கலைஞரானாலும் சரி, தமிழக முதல்வர் ஆனாலும் சரி தீபாவளிக்கு வாழ்த்து கூறாவிட்டாலும், அசுரனை வரவேற்கிற ஓணம் பண்டிகைக்கு வாழ்த்து கூறிக்கொண்டு இருக்கிறார்கள். தமிழர்களுடைய பண்பாடு என்பது இறந்துபோனவர்களை கொண்டாடி மகிழ்வது அல்ல என்பதுதான் தீபாவளிக்கு வாழ்த்து கூறாததற்கு காரணம் என்பதை சங்கிகள் இப்போதாவது புரிந்து கொள்ளட்டும்.*

# தொடர்கிறது சென்னை தெருமுனைக் கூட்டங்கள்

சென்னையின் புறநகர் பகுதிகளில் 100 கூட்டங்கள் என்ற இலக்குடன் இரண்டாம் கட்ட தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக 119வது கூட்டம் 06.11.2023 திங்கள் மாலை 6 மணிக்கு செம்மஞ்சேரியிலும், 130வது கூட்டம் சோலிங்கநல்லூரிலும் நடைப்பெற்றது.

கூட்டத்தின் முதல் நிகழ்வாக உமாபதி - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் கேட்டறிந்தனர்.

இந்த கூட்டத்தில் திமுக செம்மஞ்சேரி வட்ட செயலாளர் நாகராஜன், துணைச் செயலாளர் புஷ்பா, மாவட்ட பிரதிநிதி ஹரி, பகுதிப் பிரதிநிதி சேகர், முனுசாமி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

07.11.2023 - செவ்வாய்கிழமை, 121வது கூட்டம் நாவலூர் சிக்னல் அருகிலும், 122வது கூட்டம் தாழம்பூர் சந்திப்பிலும் நடைபெற்றது.

உமாபதி - பொன்ராஜ் குழுவினரின் சமூக - அரசியல் நையாண்டி நிகழ்ச்சியோடு கூட்டங்கள் தொடங்கியது, எட்வின் பிரபாகரன் கருத்துரையாற்றினார்.

சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் ரூ.5000, நாவலூர் திமுக ஊராட்சி மன்றத் தலைவர் ராஜாராம் நன்கொடையாக ரூ.3,000, செம்மஞ்சேரி திமுக ரூ.3000, கவுன்சிலர் மதினா பேகம் ரூ.1000 வழங்கினார். கடைவீதி வசூல் ரூ.1540 என மொத்தம் ரூ.13,540/-நன்கொடை திரட்டப்பட்டது. விசிக தாழம்பூர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ், திராவிடர் கழகத் தோழர் பெரியார் மற்றும் இளைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர். கழக ஆதரவாளர் டேவிட் பெரியார் உணவு ஏற்பாடு செய்தார்.

கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், மடிப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் எட்வின் பிரபாகரன், அருண் கோமதி ஆகியோர் தெருமுனைக் கூட்ட ஏற்பாடுகளை செய்தனர். விஜய் குமார், அருண், வீரா, சூர்யா, விஷ்ணு, குமார், செந்தில், உள்ளிட்டோர் களப்பணியாற்றினர்.

## மோடி ஆட்சி இஸ்ரேலை ஆதரிப்பது ஏன் (3)

# பாசிசத்துக்கு எதிரான பெரியாரின் கைத்தடி

**விடுதலை இராசேந்திரன்**

பெரியாருடைய கடவுள் மறுப்பு என்பது, மனிதனுக்கு மனிதன் ஏன் இந்த வேற்றுமை என்ற கேள்விகளுடன்தான் புறப்பட்டது. அதற்கு சாஸ்திரம் காரணம் என்று கூறினார்கள். அப்படியானால் சாஸ்திரத்தை ஏற்றுக் கொள்ளமாட்டேன் தீ வைத்து எரிப்பேன் என்று பெரியார் கூறினார்.

சாஸ்திரம் மதத்தின் அடிப்படையில் உருவானது என்று பாசிசப் பார்ப்பனியம் கூறியது. அப்படியானால் அத்தகைய மதம் எங்களுக்குத் தேவையில்லை மதம் ஒழிக என்று கூறினார். மதத்தை நாங்கள் உருவாக்கவில்லை கடவுளாகப் பார்த்து உருவாக்கியதுதான் வேத மதம் இந்து மதம் அது தான் வர்ணாஸ்ரமத்தை கற்பித்தது என்று கூறினார்கள்.

அப்படியானால் அப்படிப்பட்ட கடவுள் எங்களுக்குத் தேவையில்லை, ‘கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை, கடவுளை கற்பித்தவன் முட்டாள், கடவுளை பரப்புகிறவன் அயோக்கியன், கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி’ என்ற நிலைக்கு பெரியார் சென்றார்.

பெரியார் பேசிய கடவுள் மறுப்பு என்பது, பாசிச பார்ப்பனியத்தின் சமூக ஒடுக்குமுறையையும் சமூக ஆதிக்கம் என்ற ஆணிவேரையும் எதிர்த்து புறப்பட்ட ஒரு முழக்கம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரியார் பேசிய கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பை முன்வைத்து பெரியாரை இந்த மண்ணிலிருந்து அப்புறப்படுத்தி விடலாம் என்ற முயற்சியிலே தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அதற்காக பெரியார் சிலைகளை அவமதிப்பது போன்ற செயல்களை செய்து வருகிறார்கள்.

அப்படி கடவுள் மறுப்பு பேசிய மண்ணில் கோவில் சிலைகள் உடைக்கப்பட்டது இல்லை; கோவில் தகர்க்கப்பட்டதில்லை; கலவரங்களும் பெரியார் பேசிய கடவுள் மறுப்பால் நிகழ்ந்தது இல்லை; பார்ப்பன எதிர்ப்பு பேசிய இந்த தமிழ் மண்ணில் எந்த ஒரு இடத்திலும் பார்ப்பனர்கள் தாக்கப்பட்டார்கள் என்றோ வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்றோ சம்பவங்கள் நடந்தது கிடையாது. அறிவுசார்ந்த கருத்துப் போராட் டத்தைத் தான் பெரியார் நடத்தி இருந்தார்.

உதாரணத்திற்கு ஒன்றைக் கூற முடியும். காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, காந்தியை சுட்டுக் கொன்றவன் கோட்சே என்ற ஒரு பார்ப்பனர். காந்தியை கோட்சே என்ற ஒரு பார்ப்பனர் சுட்டுக் கொன்றுவிட்டான் என்ற செய்தி அறிந்தவுடன் இந்தியாவில் பல இடங்களில் மிகப்பெரும் கலவரங்கள் வெடித்தன.

குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலத்தில் அந்த மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் கட்சிக்காரர்களே சங் பரிவாரங்கள் நடத்திய கல்விக் கூடங்களை தீ வைத்துக் கொளுத்தினார்கள். பார்ப்பனர்களின் வீடுகளை குறி வைத்து தாக்கினார்கள், அக்ரஹாரங்கள் எரிக்கப்பட்டன, காங்கிரஸ் கட்சியில் பார்ப்பனர்கள் இனி எந்த பொறுப்பிலும் இருக்கக் கூடாது என்று அறிவித்தார்கள். வன்முறை தலைவிரித்தாடியது.

அப்போது, ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் சென்னையில் தான் இருந்தார். அவர் உடனடியாக பம்பாய்க்கு புறப்பட்டுச் சென்றார். ஆர்.எஸ்.எஸ். தலைமையகமான நாக்பூரில் இருந்த அவரை உயிருடன் கொளுத்துவதற்கு பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்களே திரண்டார்கள்.

அப்போது உள்துறை அமைச்சராக இருந்த டி.பி. மிஸ்ரா, கோல்வாக்கரை சிறையிலடைத்து பத்திரமாக பாதுகாத்தார். இவ்வளவு வன்முறைகள் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது, ஏற்கெனவே தமிழ்நாட்டில் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் நடத்திக் கொண்டிருந்த பெரியார் ஒரு கண் அசைத்திருந்தால் ஒரு பார்ப்பனர் கூட தமிழ்நாட்டில் மிஞ்சியிருக்க முடியாது.

ஆனால் அன்றைக்கு பெரியார், “தமிழர்களே அமைதியைக் காப்பாற்றுங்கள்; வன்முறையில் ஈடுபடாதீர்கள்” என்று தமிழ்நாட்டில் அமைதியை நிலைநாட்டச் செய்தார். ‘அகில இந்திய வானொலி’ பெரியாரை என்றைக்கும் பேச அழைத்தது இல்லை.

அது பார்ப்பனர்கள் கையில் இருக்கிற ஒலிபரப்பு சாதனம். அந்த அகில இந்திய வானொலியே பெரியாரை அழைத்து, நீங்கள் மக்களை அமைதியாக இருக்கக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று பெரியாரையும், அண்ணாவையும் பேச அழைத்தது.

பெரியார், வானொலியில் அமைதியை காப்பாற்றுங்கள் என்று கூறி தமிழ் நாட்டில் பார்ப்பனர்களின் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தார் என்பதை ஒவ்வொரு பார்ப்பனரும் நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இது தொடர்பாக தலைசிறந்த ‘மண்வாசனை’ எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கூறிய ஒரு சம்பவத்தைக் குறிப்பிட வேண்டும். ஓவியர் புகழேந்தி, பெரியார் பற்றிய கோட்டு ஓவியங்களடங்கிய நூல் ஒன்றை ‘திசைமுகம்’ என்ற பெயரில் வெளியிட்டார். அந்நூலைப் பார்த்து பூரிப்புடன் ஓவியர் புகழேந்திக்கு ‘கி.ரா.’ எனும் கி.ராஜநாராயணன் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

> **வன்முறை – பார்ப்பனரல்லாத மக்களை பாதிக்கும் என்று கவலைப்பட்டார் பெரியார்.**
>
> **மறைந்த ‘கி.ரா’ பெரியாரின் மனிதத்தை அழகாக படம் பிடித்தார்.**
>
> **பாசிசம் திணித்தது ; பெரியாரியம் சிந்திக்கச் சொன்னது.**

*“திசைமுகம் கோட்டோவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது இவை என்னை எங்கேயோ கொண்டு போனது. பெரியாரை முதன்முதலில் பார்த்தவுடன் ஒரு முனிவர் போல எனக்குக் காட்சி தந்தார் என்று என்னிடம் சொன்னவர் ஓர் அய்யர்வாள். எனக்காகச் சொன்ன வார்த்தை இல்லை அது; மனம் திறந்து சொன்னது.*

*அப்படிச் சொல்ல அவருக்குக் காரணம் இருந்தது. காந்திஜி சுடப்பட்டவுடன், வானொலியில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. காந்திஜியை கொன்றவன் ஓர் இந்துதான் சுட்டுக் கொன்றான்.*

*இப்படியே ஏன் சொல்லிக்கொண்டிருந்தார்கள்? முஸ்லீம் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறையில்தான். அந்தச் சமயத்தில் ஒரு பொதுக்கூட்டம் திராவிடர் கழகத்தினர் நடத்தினார்கள். பெரும் மக்கள் கொண்ட கூட்டம் அது. உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்தது. பெரியார் பேசப் போகிறார். அதுக்கு முன்னால் ஒரு முக்கிய பிரமுகர் பேசினார்;*

*காந்தியாரைக் கொன்றது யார் தெரியுமா? என்று கேட்டு கொஞ்சம் இடைவெளி விட்டுப் பேசத் தொடங்கியதும், மேஜை மேல் வைத்திருந்த தடிமனான தனது கைத்தடியினால் ஒரு வாத்தியார் பள்ளிப் பிள்ளைகளின் சப்தத்தை அமைதிப்படுத்த தட்டுவார்களே அதுபோல் தட்டி அந்தப் பேச்சாளரை எச்சரித்தார்.*

*அந்தப் பேச்சாளர் சொல்லவந்தது; காந்தியாரைச் சுட்டுக் கொன்றவன் ஒரு பார்ப்பனன்; என்று பெரியாரின் அந்தக் கைத்தடி ஓசை ‘அப்படிச் சொல்லிவிடாதே’ என்று தடுத்து நிறுத்திவிட்டது.*

*அந்தப் பிரம்பின் ஓசை எத்தனையோ மனித உயிர்களை காப்பாற்றியது, எத்தனையோ பெண்களின் கற்பைக் காப்பாற்றியது, கோட்சே ஒரு பிராமணன் என்று சொல்ல ரொம்ப நேரம் ஆகாது. அதன் விளைவை நொடியில் யூகித்த பெரியார் தடுத்து நிறுத்தினார்.*

*பெரியார் என்ற மானுடன் அவரது உள்ளம் தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும்.* ஓவியர் புகழேந்திக்கு 01.01.2004 இல் எழுதிய கடிதத்திலிருந்து... கி.ராஜநாராயணன் என்று தனது நினைவுகளைப் பதிவு செய்துள்ளார். (‘விடுதலை’ வெளியிட்டுள்ள பெரியார் பிறந்த நாள் மலரிலும் இது பதிவாகியிருக்கிறது)

திரைமறைவில் பதுங்கி இருந்து கோடரிக் கம்புகளை ஏவி விட்டு, பெரியார் சிலைகளுக்கு காவிச் சாயம் பூசுவது, சிலையை சேதப் படுத்துவது என்று காலித்தனத்தில் இறங்கிக் கொண்டிருக்கிற பார்ப்பனர்கள், பெரியார் இந்த பார்ப்பனப் பிரச்சினையை எவ்வளவு பன்போடு அமைதியோடு கையாண்டார் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரியார் வன்முறை வேண்டாம் என்று கூறியதற்கு காரணம், வன்முறை என்ற ஒன்று இந்த நாட்டில் வந்துவிட்டால்; அதில் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஒருபோதும் பார்ப்பனர்களாக இருக்க மாட்டார்கள்; நம்முடைய மக்கள்தான் பாதிக்கப் படுவார்கள் என்பதனால் தான் வன்முறை வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தாரே தவிர, காந்தியாரின் அகிம்சையை ஏற்றுக் கொண்டார் என்ற அடிப்படையில் அல்ல.

எனவே, இங்கு கோவில் சிலைகளுக்கு ஒரு சேதம் ஏற்பட வில்லை, பார்ப்பனர்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாத வாறு தான் தமிழ்நாட்டில் ஒரு சமூக மாற்றம் ஏற்பட்டது.

பெரியார் ஊர் ஊராக சென்று மக்களிடையே கருத்துக்களை பேசினார். பாசிசம் என்ன கூறுகிறது என்றால் நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும் கேட்காவிட்டால் இந்த நாட்டில் இருப்பதற்கான உரிமை உனக்கு கிடையாது. நீ கைது செய்யப் படுவாய், சிறையிலடைக்கப்படுவாய் அல்லது சுட்டுக்கொல்லப்படுவாய் இப்படித்தான் பாசிசம் கூறுகிறது.

பார்ப்பனியம் என்ன கூறியதென்றால், ‘நான் கூறுகிற வேதங்கள், வேத சடங்குகள் தான் உனக்கான வாழ்க்கை இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு நீ வாழ வேண்டும்; இந்த வாழ்க்கையை ஏற்காமல் நீ வாழ்ந்தாய் என்றால் நரகத்திற்கு போவாய்,நீசொல்லெனாகொடுமைக்குஉள்ளாவாய்’ என்று கூறி ஒடுக்கப்பட்ட மக்களையே அச்சத்தின் காரணமாக, கடவுளின் காரணமாக சடங்குகளை, சம்பிரதாயங்களை ஏற்க வைத்து தனக்கு அடிமைப்படுத்தி அடிமையாக வைத்திருந்தது பார்ப்பனியம். இன்றைக்கும், பழக்க வழக்கங்கள், இதுதான் கலாச்சார மரபுகள், இப்படித்தான் இருக்க வேண்டும் கோவிலில் தமிழ்மொழி இருக்கக் கூடாது அர்ச்சகராக பிராமணர்கள் மட்டும்தான் இருக்க வேண்டும் இதுதான் பழக்க வழக்கம் என்று கூறி சட்டத்திலேயே அதற்கு ஏற்பு வழங்கி அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அனைவரையும் இந்துக்கள் என்று கூறுகிறார்கள்.

நாம் இந்துக்கள் என்ற அடையாளத்தை ஏற்கவில்லை. ஏற்கா விட்டாலும் நாம் அனைவரும் இந்துக்கள்தான் என்று கூறுகிற அளவிற்கு சட்டத்தை இந்த நாட்டில் திணித்து வன்முறை சிந்தனை வழியாக அனைவரும் இந்துக்கள் என்ற சிறைக்குள்ளே அடைத்து வைத்திருக் கிறார்கள். இப்படிப்பட்ட அடக்குமுறைகளை அன்றைக்கு செய்தவர்கள்; இன்று ஆட்சி அதிகாரங்கள் கைக்கு வந்தவுடன் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் பெரியார் அப்படி ஒருபோதும் செயல்பட்டதில்லை. அவர் ஒவ்வொரு கூட்டங்களிலும் இந்த ஆபத்துக்களை சுட்டிக்காட்டி பேசுகிறபோது, இறுதியில் ‘நான் கூறுகிறேன் என்பதற்காக நீங்கள் என்னுடைய கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. உங்கள் மனதிற்கு நியாயம் என்று பட்டால், உங்கள் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பாருங்கள் சரியென்றால் ஏற்றுக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் அவற்றை தள்ளி விடுங்கள்’ என்று மக்களிடம் கருத்து சுதந்தித்தை விதைத்தார்.

அமைதியான வழியால் தான் பெரியார் பிரச்சாரத்தை செய்தார். தன் மீது வீசப்பட்ட கல்லடிகளையும், செருப்படிகளையும், சொல்லடிகளையும் சுமந்து கொண்டு இந்த சமூகத்திற்காக மீண்டும் மீண்டும் மக்களை சந்தித்து வன்முறையில் ஈடுபடாதீர்கள் என்று கூறி மக்களிடையே தொடர்ச்சியாக உரையாடினார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி (2)

# பெ.ம கூறும் ‘தமிழ் இந்து’ இன விடுதலைக்கு துணை செய்யுமா?

***பேராசிரியர் ஜெயராமன் எழுதிய தமிழ்த் தேசத்தின் எதிர் யார்? “தமிழ் இந்து : இந்துத்துவா இந்தியாவுக்கு இணக்கமான முன்னெடுப்பு” என்ற இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு அக்டோபர் 28,2023 அன்றூ மேடவாக்கம் பவலரேறு தமிழ்க்களத்தில் நிகழ்ந்தது. நூலை கழகத் தலைவர் வெளியிட்டார், தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பொழிலன் தலைமையில் நடைபெற்றது. நூலை வெளியிட்டு கழகத் தலைவர் உரை :***

மா.பொ.சி அந்த காலத்து மணியரசன், சீமான் தான் அவர். திராவிடர் கழகம் மிக வேகமாக தனித் தமிழ்நாடு கோரிக்கைக்கு எழுச்சியுடன் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் போது தான் மா.பொ.சி உருவாக்கப்பட்டார். இவர் 1946-இல் தமிழ்தேசம் என்றார். சுதந்திர தமிழ் குடியரசு என்றார். அடுத்த ஆறு ஆண்டுகளில் தமிழ்நாடு கேட்பதை தடுப்பதற்காகத்தான் நான் வந்தேனே ஒழிய நான் என்றைக்கும் தனிநாடு கேட்கவில்லை என்று அவரே எழுதியிருக்கிறார். அதை விடுதலையில் குத்தூசி குருசாமி எழுதினார். தமிழ்நாட்டில் காமராசர் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தனர். ஆனால் ஒரே ஒரு கட்சி மட்டும் தனது தலைமை செயற்குழுவில் குலக்கல்வித் திட்டத்தை ஆதரித்து தீர்மானம் இயற்றியது, அதுதான் மா.பொ.சி. அவருடைய தமிழரசு கழகம் மட்டும் தான் குலக்கல்வித் திட்டத்தை ஆதரித்து தீர்மானம் போட்டது. வேறுயாரும் தமிழ்நாட்டில் ஏற்றுக்கொள்ளவே இல்லை. இராஜாஜி சொல்வதை இவர் செய்வார் அவ்வளவு தான். அதற்கு மீறி அவருக்கு தனிப்பட்ட அறிவு ஏதுவும் கிடையாது.

நான் இந்து என்பதால் சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொள்கிறேன், இந்தியன் என்பதால் இந்தியை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னவர் தான் மா.பொ.சி. அவ்வளவு குழப்பவாதிகளை எல்லாம் ஆதரிப்பவர்களாக அல்லது எதிர்க்காதவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

தமிழ்தேசியம் என்னவென்றால் நான் முதல்வராவது, அதுவா தமிழ்தேசியம். நான் பல இடங்களில் பேசியிருக்கிறேன். ஜெயலலிதா சிறையில் இருக்கும் போது பல முறை பன்னீர்செல்வத்தை தற்காலிக முதல்வராக்கினார். அப்போதே தமிழன் முதல்வராகி விட்டார், நான் கட்சியைக் கலைக்கிறேன் என்று சொல்லிவிட்டு போனால் சிக்கலே தீர்ந்திருக்கும். அதற்கு பிறகு பழனிசாமி முதல்வரானார். அவரும் தமிழன் தான். இத்தோடு முடிந்து போய்விட்டது. ஆனால் நான் முதல்வராவது தான் தமிழ் தேசியம், நீங்கள் முதல்வராவதல்ல என்கிறார்கள். இதுவா தமிழ்தேசியம். இதைவிட தமிழ்தேசியத்தை எப்படி கொச்சைப்படுத்த முடியும். அப்படியானால் அவர் தமிழ்தேசியர் என்றே பேசக்கூடாது.

ஒரு சுயமரியாதைக்காரரான நீங்கள் ஒரு மதத்தை பரிந்துரைக்கலாமா என்று ஒருவர் கேட்டார். அதற்கு பெரியார் சாத்தான்குளத்தில் நடைபெற்ற நபிகள் பிறந்தநாள் விழாவில் பதிலளித்து பேசினார். எல்லா மதமும் ஒழிய வேண்டும், அது ஒழியும் போது இஸ்லாம் மதமும் ஒழிந்துவிடும் என்று பேசினார். ஆனால் என்னிடம் வந்து ஒருவர் அய்யா தீண்டாமைக் கொடுமைகளை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை, எப்படி வெளியே வருவது என்று கேட்க, நான் இந்து இல்லை என்று வெளியே வந்துவிடு என்று கூறினார். இஸ்லாமிய மார்க்கம் தீண்டாமையை ஒழித்துவிடும் என்றார். தன் மீதுள்ள தீண்டாமை மட்டும் போய்விட்டால் போதும் என்று என்னிடம் வந்து நிற்கிறவருக்கு நான் ஆலோசனை சொல்லலாமா? வேண்டாமா? இது சுயமரியாதைக்காரருக்கு சொன்னதல்ல, பெண்ணியவாதிக்கு சொன்னதல்ல. தன் மீதுள்ள தீண்டாமை போகாதா என்ற ஏக்கம் கொண்ட என் தோழனுக்கு அறிவுரை சொன்னேன் என்றார்.

யாரவாது உங்கள் மதம் என்னவென்று கேட்டால் குறள் மதம் என்று கூறுங்கள் என்று சொன்னவர் பெரியார். 1940இல் கணக்கெடுப்பின் போது பெரியார் உங்களை திராவிடன் என்று பதிவு செய்யுங்கள் என்று சொன்னார். 1980களில் ஆந்திராவில் ஒருவர் சன்னியாசி ஆனார். அவரை சன்னியாசி என்று சொல்லக்கூடாது என்று கூறி வழக்கு தொடர்ந்தனர். சூத்திரன் சன்னியாசி என்று போடக்கூடாது என்று ஆந்திர உயர்நீதிமன்றம் தீர்ப்பு சொன்னது. சன்னியாசி என்று கூட சொல்லக்கூடாத அளவுக்குத்தான் நம்மை வைத்திருக்கிறார்கள்.

1996இல் ஒரு வழக்கு, முதல் திருமணத்தை ரத்து செய்யாமலேயே இன்னொரு திருமணம் நடந்து குழந்தை பிறந்தது, அவருக்கு சொத்தில் உரிமை இல்லை என்று சொல்கிறார்கள். திருமணத்தை ரத்து செய்யாமல் இன்னொரு திருமணம் செய்ததை உயர்நீதிமன்றம் ஒப்புக்கொள்ளவில்லை. வழக்கு உச்சநீதிமன்றம் சென்றது. உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றம் ஒன்றை கவனிக்க தவறிவிட்டது என்று கூறியது. இந்த வழக்காடிகள் எல்லாம் சூத்திரர்கள், சூத்திரர்களுக்கு மனைவியும் ஒன்றுதான், வைப்பாட்டியும் ஒன்றுதான் அவர்களுக்கு சொத்துரிமை உண்டு என்று தீர்ப்பு சொன்னது. அந்த இந்து மதத்தில் சேர்ந்து நம்மை தமிழ் இந்து என்று சொல்லிக்கொள்ளுங்கள் என்கிறார் அய்யா மணியரசன்.

ஒன்றியத்தில் உள்ள அஞ்சல் துறை எல்லோருக்கும் ஒரு செய்தியை அனுப்புகிறது. பணவிடை அனுப்புவதில் உள்ள படிவங்கள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் தான் இருக்கிறது. இது பல சிக்கல்களை உருவாக்குகிறது. ஏன் அந்தந்த வட்டார மொழிகளில் வெளியிடக்கூடாது என்று கேள்வி எழுப்புகிறார்கள். உடனே குமரி ஆனந்தன் மணி ஆர்டர் படிவத்தை தமிழில் வெளியிடக் கோரி ஒரு போராட்டத்தை அறிவிக்கிறார். உடனே அடுத்த வாரம் போராட்டம் வெற்றி பணவிடைத்தாள்கள் அடுத்த வாரம் முதல் தமிழில் வெளிவரும் என்று அறிவிக்கிறார். இதைப்போலத்தாலத்தான் தமிழிலும் குடமுழுக்கு செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கையை பெ.மணியரசன் முன் வைக்கிறார். அரசு தரப்பில் 1980 மற்றும் 1997 என இரண்டுமுறை தஞ்சை பெரிய கோயிலில் குடமுழுக்கு நடந்தது. இரண்டு குடமுழுக்குகளிலும் சமஸ்கிருதத்திலும், தமிழிலும் தான் செய்யப்பட்டது என்று அறநிலையத்துறை நீதிமன்றத்தில் பதில் மனு அளித்தது. ஆனால் நாங்கள் தான் போராடிப் பெற்றோம் என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள்.

தமிழ்தேசியத்தை உருவாக்க நாங்கள் முயற்சிக்கிறோம் என்கிறார்கள். இந்து மதத்தில் சிக்கி இருப்பவர்களை விடுவிப்பதற்காகத் தான் நாங்கள் தமிழ் இந்து என்று சொல்கிறோம் என்கிறார்கள், அதையும் தாண்டி இதை மதச்சார்பற்ற சொல் என்று வேறு சொல்லிக்கொள்கிறார் பெ.மணியரசன். இதெல்லாமா ஒரு வாதம்?

பெரியார் தன் வாழ்நாளில் ஆட்சியாளர்களை பாராட்டியுள்ளாரா என்றால் அது இரண்டு பேரை மட்டும் தான். ஒன்று ஆப்கானிஸ்தானை சேர்ந்த அமீர் அமானுல்லா, மற்றொருவர் முஸ்தஃபா கமால் பாட்ஷா. இந்த இருவரைத்தான் தொடர்ச்சியாக பேசியிருக்கிறார். உலகம் முழுமைக்கும் உள்ளது போல் இங்கு ஞாயிற்றுக்கிழமை தான் விடுமுறை நாள், வெள்ளிக்கிழமை கிடையாது என்று அறிவித்தார் கமால் பாட்ஷா. பெண்கள் கல்வி நிலையத்துக்கு வர வேண்டும் என்றார் அமீன் அமானுல்லா. பெண்கள் முக்காடு அணிந்தால் அவர்களுக்கு அபராதம் விதித்தவர் கமால் பாட்ஷா. இப்படி ஒவ்வொன்றாக பாராட்டி எழுதியவர் பெரியார். அமீன் அமானுல்லாவில் மரணம் அநியாயமாக நடந்ததை பார்த்து வருந்தினார் பெரியார். அவர்களை எல்லாம் கூட மணியரசன் அயோக்கியர் என்று எழுதுகிறாரா என்று கேள்வி எழுப்புகிறது இந்நூல்.

என்னென்ன பிழைகள் எல்லாம் இருக்கக்கூடாதோ அத்தனை பிழைகளையும் கொண்ட ஒரு நூலாக இருக்கிற தமிழ் இந்துவுக்கு ஒரு பதில். எனவே இந்த சிந்தனைகளை நாம் உள்வாங்குவோம், அதை மக்களிடம் பேசுவோம், இந்நூலை மக்களிடம் பரப்புவதற்கு நம்மாலான உதவிகளை செய்வோம் என்றார் கொளத்தூர்மணி.

***(நிறைவு)***

## பட்டாசு குப்பைகளை அகற்றிய கழக செயல்வீரர்கள்



சென்னை : தீபாவளி முடிந்தவுடன் அதில் வெடிக்கப்படும் பட்டாசுகள் சுற்றுச்சூழலை கடுமையாக பாதிப்பதோடு, விலங்கினங்களையும் கடுமையாக பாதிக்கிறது. ஒவ்வொரு பறவையும், ஒவ்வொரு விலங்கும் இந்த பட்டாசு சத்தத்தைக் கேட்டு நடுநடுங்கி போகிறது. அதுமட்டுமின்றி வீதிகளில் டன் கணக்கில் குப்பைகள் மலை போல் குவிந்து கிடக்கின்றன.

இந்த குப்பைகளை அகற்றும் கடும் பணியில் ஈடுபடுபவர்கள் தூய்மைப் பணியாளர்கள் தான். தீபாவளிக்கு ஏன் வாழ்த்து கூறவில்லை என்று கேட்கிற சங்கிகள், தெருக்களில் மண்டிக்கிடக்கிற குப்பைகளை அகற்றுவதற்கு தூய்மைப் பணியாளர்கள் எவ்வளவு இடர்பாடுகளை சந்திக்கின்றனர் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை.

சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் அருண், சூர்யா, குமார், வீரா, கோபி, அஜித், மாணிக்கம், ஆட்டோ அருண், பேரன்பு, மயிலை அருண், உதயா, விஜய், பாஸ்கர், ஆகியோர் இராயப்பேட்டை வி.எம்.தெருவில் குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுப்பட்டனர். சுமார் நான்கு மணி நேரம், 15 கழகத் தோழர்கள் வீதியில் இறங்கி குப்பைகளை அகற்றி தெருவை தூய்மைப்படுத்தியிருக்கிறார்கள்.

தூய்மை பணியாளர்களுக்கு உதவுகின்ற இந்த பணியை அப்பகுதி பொதுமக்கள் வெகுவாக பாராட்டி, அவர்களுக்கு தேனீர் வழங்கி இருக்கிறார்கள். குப்பைகளை உருவாக்குவது பட்டாசுகளும், தீபாவளிகளும், பண்டிகைகளும் என்று சொன்னால், அதை அகற்றுவதற்கு கருஞ்சட்டைப் படை தான் வரவேண்டி இருக்கிறது. மனிதநேயம் உள்ளவர்கள் இதைத்தான் செய்வார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 16, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran